தமிழர் வீரத்தில் மட்டுமல்லாமல் அறிவுபூர்வமான கல்வியிலும் சிறந்து விளங்கினர் என்பதையும் அறிய முடிகிறது.

தமிழரின் காதலைப்பற்றி சொல்லும் போது அரசர் பாண்டியன் நெடுஞ்செழியன் அரசவையில் கோவலனை தீர விசாரிக்காமல் கொன்ற தன் தவறை உணர்ந்து உயிர் விடும்போது அவர் மனைவி அரசி கோப்பெருந்தேவி தானும் இயற்கையாகவே மூர்ச்சையாகி இறக்கிறாள்.

தமிழர் தன் நிலை அறியாத நிலையில் தற்போது என்ன செய்ய வேண்டும், என்ன செய்ய கூடாது என்றும் அறியாத நிலையில் இருக்கின்றனர்.

தன்னை உயர்த்திக்கொள்ள மட்டும் தமிழை படிக்கல்லாக மட்டுமே பயன்படுத்திக்கொள்ளுபவர்களை தமிழர்கள் அடையாளம் கண்டு கொள்ளவேண்டும். உடன் இருந்து நன்றாக அறிந்தே நம்பிக்கை துரோகம் செய்பவர்களை தமிழர்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

உண்மையிலேயே உள்ளபடி உள்ள உண்மையை பகுத்தறிய முயற்சிக்க வேண்டும். பகுத்தறிந்தபின் கண்ட பழுதை நீக்க உண்மையை மற்றவர் உணரச்செய்து ஆக்கபூர்வ முழு முயற்சியை என்றும் எப்போதும் தெளிவு குறையாத அறிவுடன் பாரபட்சமின்றி இடர்களைமீறி எடுக்க வேண்டும்.

உலகில் தமிழர்கள் மிக மிக அறிவுபூர்வமானவர்கள் என்று நிரூபிக்கும்படியாக மாற்றம் ஏற்படுத்த வேண்டும்.

இதே தமிழர்கள் சங்க காலத்தில் தமிழ்சங்கம் அமைத்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு வழி செய்தனர். அப்படி செய்ததால் தான் உலகின் பழைய செம்மொழிகள் அனைத்தும் பேச்சு வழக்கு இழந்த நிலையிலும் தமிழ் தன் தனித்தன்மை மாறாது இன்றும் அனைத்து வகையிலும் செம்மொழியாக பயன்பாட்டில் உள்ளது. இது இன்னும் மேலும் மேலும் வளர்ச்சி பெற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

தமிழரின் மொழி, பண்பாடு காக்க சங்கம் வைத்து தமிழ் வளர்த்த அன்றைய தமிழரின் நோக்கம் இனிமேலும் வாழையடி வாழையாக காப்பாற்றபடுமா என்பது இன்றைய தமிழரின் வல்லமை அல்லது இயலாமையை பொறுத்தது.

© ARCHIES LTD.